## பொய்க்கால் குதிரையின் தமிழ் அழகியல்.

சிலப்பதிகாரம் கடலாடு காதை 11 வகைக் கூத்துக்களைப் பேசுகிறது. இதில் ஒன்று ”மரக்கால் கூத்து” .இது இன்று கட்டைக்கூத்து என்றழைக்கப்படுகிறது. இதன் அடுத்த கட்டம்தான் இன்றைய பொய்க்கால் குதிரை.

“காய்ச்சின அவுணர் கடுந்தொழில் பெறாஅள்
மாயவன் ஆடிய மரக்கால் ஆடலும் ”. என்பது சிலப்பதிகாரம்.பெ.தூரன் தொகுத்த கலைக் களஞ்சியத்தில் ”குந்தளம்” எனும் இசைக்கருவியே இதன் பக்கவாத்தியமாக் ஆதியில் இருந்தது என்றும் பிற்காலத்தில் நாதசுரமும் பாண்டு வாத்தியமும் சேர்ந்து கொண்டது என்கிறார்.

இன்று நாம் இழந்து வரும் இக்கலையில் 2 ½ அடி உயர கால்கட்டை..1 ½ அடி உயர பாதக் கட்டை. குதிரை வாகனம் மண்ணால் செய்யப்பட்டு காகிதம், துணி, புளியங்கொட்டைப் பசையினால் ஒட்டி கழுது,இடுப்பு , புட்டம் நசுங்கல் ஏற்படாத அளவுக்கு கல்யாண முருங்கை மரத்தில் ஆங்காக்ங்கு பதப்படுத்தி சாக்குப் பவுடரைத் தண்ணீரில் கலந்து உடலெல்லாம் பூசிக் காயவைத்து, உஅடலுக்கும் முகத்துக்கும் கண்ணாடித் துண்டுகளால் ஆபரணம்போல் செய்து, கால் கட்டைத் தெரியாமல் இருக்க பாவாடை இணைத்துச் செய்யப்படுவதே தனியான கைவினையாகும். கால் கட்டையைக் கட்டியபிறகு நாடாவை தோளில் இரு பக்கமும் பிணைத்துக் கொண்டு நாடா தெரியாத் அளவுக்கு ராஜா ராணி வேட உடுப்புகளை அணிய வேண்டும். கட்டை மேல் நின்று அந்தரமாய் நடை பழக மூன்று மாதம் ஆகிவிடும். ஒரு வருடமாவது பழகாமல் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆட முடியாது.

